இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 2002 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவு தொகை (ஒழித்தற்) சட்டம்

---

*(2002, யூன் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, யூன் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2002 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகை (ஒழித்தற்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– ஒ. 56/2001
4669

**1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகைச் சட்டமானது எவ்வாட்களுக்கு ஏற்புடைத் தாகின்றதோ அவ்வாட்களிடமிருந்து அச்சட்டத்தின் கீழான நாடுகாக்கும் உதவுதொகையின் விதிப்பனவை 2001, ஒற்றோபர் 1 ஆம் தேதி முதல் பயனுறும் வகையில் ஒழிப்பதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகை (ஒழித்தற்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2001, ஒற்றோபர் 1 ஆம் தேதியிலிருந்து நாடுகாக்கும் உதவுதொகை விதிப்பனவை ஒழித்தல்.

2. 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகைச் சட்டத்தில் எது எப்படியிருப்பினும் 2001 ஆம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆம் தேதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்கி –

(அ) அச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆளிட மிருந்து ஏதேனுமாண்டின் ஏதேனும் காலாண்டுக்கு நாடுகாக்கும் உதவுதொகையானது விதிக்கப்படுத லும் அறவிடப்படுதலுமாகாது ;

(ஆ) அச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனுமாளின் தொழில்தருநர், ஏதேனும் மாதத்திற்கென அச்சட்டத் தின் 4 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்கு செலுத்தற்பாலதான வேதனாதிகளிலிருந்து அத்த கைய தொழில்தருநர் கழிக்கத் தேவைப்படுத்தப் பட்டுள்ள ஏதேனும் தொகையைக் கழிக்கத் தேவைப் படுத்தப்படுதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.